மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மேட்டூர்.

| | | | |
|---|---|---|---|
| அ.வ.எண். | 27/2015 | சாட்சி | வா.சா.1 |
| பெயர் | சந்திரசேகர் (எ) சந்திரசேகரன் | நாள் | 23.01.2023 |
| தகப்பனார் பெயர் | சண்முகம் | | |

**பிரதிவாதிகள் தரப்பில் வா.சா.1 குறுக்கு விசாரணை தொடர்ச்சி:-**

18) தாவா சொத்தின் பட்டா எண்கள் எனக்கு தெரியுமா என்றால், பட்டா எண்கள், 652, 653 ஆகும். மேற்படி 2 பட்டாக்களையும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால், 652 எண் கொண்ட பட்டாவை தாக்கல் செய்துள்ளேன். 653 எண் கொண்ட பட்டாவை பெயர் மாறுதலாக உள்ளதால் தாக்கல் செய்யவில்லை.

19) மேற்படி 653 எண் கொண்ட பட்டாவில் தற்போது சண்முகத்தின் பெயர் உள்ளது. என் தாத்தாவின் பெயரில் இல்லை. பொன்னியம்மாள் இறந்த பின்பு என் தந்தை, என் தாயாரை திருமணம் செய்துகொண்டார் என்று நான் சொல்லியுள்ள நிலையில் மேற்படி பொன்னியம்மாளின் இறப்பு சான்றிதழ் எதையேனும் நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால், இல்லை.

20) என் தாயாரை, என் தந்தை 2-வதாக திருமணம் செய்யும் போது கோவிந்தராஜுக்கு என்ன வயது இருக்கும் என்றால், எனக்கு சரியாக நினைவில்லை. கோவிந்தராஜ் இறக்கும்போது என்ன வயது இருக்கும் என்றால், வயது எனக்கு சரியாக தெரியாது. ஆனால் 1992 ம் ஆண்டில் அவர் இறந்தார்.

21) மேற்படி கோவிந்தராஜுக்கு 1 ம் பிரதிவாதி மனைவியும், 2, 3 பிரதிவாதிகள் மகனும், மகளும் ஆவர் என்றால், சரிதான். கோவிந்தராஜ் விவசாயம் செய்து வந்தார் என்றால், இல்லை. அவர் ஆட்டு வியாபாரம் செய்து வந்தார். கோவிந்தராஜ் ஆட்டு வியாபாரம் செய்து வந்தார் என நான் சொல்வது தவறானது என்றாலும், அவர் விவசாயம் மட்டும்தான் தொழிலாக செய்து வந்தார் என்றாலும் சரியல்ல.

22) கோவிந்தராஜுக்கு திருமணம் ஆனதற்கு பின்பு ச.எண்.386/7A4 ல் உள்ள கதவு

எண்.3–7–47 ல் தான் வசித்து வந்தார் என்றால், சரிதான். மேற்படி அதே வீட்டில்தான் கோவிந்தராஜ் வாழ்ந்து இறந்தார் என்றால், சரிதான். மேற்படி கோவிந்தராஜ் இறந்த பின்பு 1 முதல் 3 வரையிலான பிரதிவாதிகள் மேற்படி வீட்டில்தான் தற்போது வரை வசித்து வருகின்றனர் என்றால், சரிதான். ஆனால் அவர் இறந்ததற்கு பின்பு 6, 7 வருடங்கள் அவர்கள் அங்கு வரவில்லை. அதற்கு பின்புதான் தற்போது வரை அங்கு வசித்து வருகிறார்கள்.

23) நான் அவ்வாறு 6, 7 வருடங்கள் கழித்துதான் பிரதிவாதிகள் மேற்படி வீட்டில் வசித்து வருகிறார்கள் என சொல்வது பொய்யானது என்றாலும், கோவிந்தராஜ் இறந்ததற்கு பின்பு 1 முதல் 3 வரையிலான பிரதிவாதிகள் தொடர்ந்து அங்கு வசித்து வருகிறார்கள் என்றாலும், சரியல்ல.

24) 2ம் வாதி பெரியா கவுண்டர் எனக்கு மூத்த சகோதரர் என்றால், சரிதான். 2ம் வாதி பிறந்ததிலிருந்தே மனநிலை பாதிக்கப்பட்டவர் என்றால், இல்லை. கோவிந்தராஜ் இறந்ததற்கு பின்பு தான் 1993ம் வருடத்தில் அவருக்கு மனநிலை பாதிக்கப்பட்டது. 2ம் வாதி பெரியா கவுண்டர் இறக்கும் வரை மனநிலை பாதிக்கப்பட்டுதான் இருந்தார் என்றால், சரிதான்.

(பிரதிவாதிகள் தரப்பு வேண்டுகோளுக்கிணங்க வா.சா.1 குறுக்கு விசாரணை தொடர்ச்சி வேறு ஒரு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது).

ஒம்/–திரு. R.மணிவர்மன்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.